**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2 ஆம் நாள் வியாழன்கிழமை**
**I.A.NO. 7/2026 in O.S. No.166/2019**

1. R. பாலகிருஷ்ணன்
2. R. விஜயன்
3. R. முத்துக்கருப்பு @ தங்கராஜ் (இறப்பு)
4. R. ஆறுமுகம்
5. K. பாக்கியலெட்சுமி @ பாக்கியம் (இறப்பு)
6. காத்தமுத்து (இறப்பு)
7. தாயப்பன்
8. கார்த்திக்
9. தனலெட்சுமி
10. ஜோதிமணி
11. முத்துலெட்சுமி
12. சரவணக்குமார்
13. வீரலெட்சுமி .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

பழனிச்சாமி .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது இறுதியாக இன்று(02.04.2026) இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.பால்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரர்களது தரப்பில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக எதிர்மனுதாரரை மீண்டும் சமூகம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து மேற்படி அசல் வழக்கை Re–Open செய்வதற்கு அனுமதியளிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை **151–**ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2)**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவுரை சுருக்கம்**

இம்மனுவின் 2ம் மனுதாரர், மேற்படி அசல் வழக்கில் 2ம் வாதியாவார். மேற்படி 1,3,4 மனுதாரர்கள்/வாதிகள் 2ம் மனுதாரரது உடன்பிறந்த சகோதரர்கள், 6 முதல் 9 மனுதாரர்கள் , மனுதாரரது உடன்பிறந்த சகோதரியான இறந்துபோன 5ம் மனுதாரரின் வாரிசுதாரர்கள், 10 முதல் 13 மனுதாரர்கள் மனுதாரரது உடன்பிறந்த சகோதரரான இறந்துபோன 3ம் மனுதாரரின் வாரிசுதாரர்கள் ஆவார்கள். 2ம் மனுதாரர் மற்ற மனுதாரர்களுக்காகவும் சேர்த்து இம்மனுவை தாக்கல் செய்கிறார்.

அசல் வழக்கு பிரதிவாதி மீது நிரந்தரதடையுத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில், எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காகக் கடந்த 26.02.2026ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றையதினம், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் மருத்துவமனைக்கு சென்றுவிட்டதனால், மனுதாரரது தரப்பில் எதிரிமனுதாரர்/பிரதிவாதியின் குறுக்கு விசாரணை Close செய்யப்பட்டுவிட்டது. அதனால், எதிர்மனுதாரரை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4) **<u>தீர்வு</u>**

மனுதாரர்களின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல்வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், வாய்தா தேதியன்று மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கு சென்றுவிட்ட காரணத்தினால், மனுதாரரது தரப்பில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் குறுக்கு விசாரணை Close செய்யப்பட்டுவிட்டது. எனவே, எதிர்மனுதாரர்/பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக அசல் வழக்கை Re–Open செய்வதற்கு போதுமான நியாயமான வாய்ப்பை வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார். என்ன உடல்நிலை சரியில்லை என்று குறிப்பிட்டு கூறவில்லை. பலமுறை வாய்ப்பளித்தும் DW1ஐ குறுக்கு விசாரணை செய்ய வராததால் தான் DW1 சாட்சியமானது இந்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது. என்ன காரணத்தினால் 26.02.2026 அன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணையை மேற்கொள்ளவில்லை என்பதை பொறுத்து கூறவில்லை என்றாலும், உடல்நிலை சரியில்லை என்று கூறியுள்ள காரணம் இம்மனுவை அனுமதிக்க போதுமான காரணமாக ஏற்றுக்கொண்டு, இவ்வழக்கை இறுதியாக தீர்மானிக்க பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது நீதியின் பொருட்டு அவசியம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இருப்பினும், உடனடியாக இம்மனுவை தாக்கல் செய்யாமல் ஒரு மாதம் கழித்து இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரரை அழைக்களிப்பு செய்ததற்காக இம்மனுவானது எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் இம்மனுவின் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/–ஐ செலவுத்தொகையாக வருகிற 08.04.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்ததாக கருதப்படும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவில்**, இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.04.02 17:55:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர், ஆத்தூர்.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி , சான்றாவணங்கள்**: இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.04.02 17:55:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர், ஆத்தூர்.